சுருக்கம்

பொதுப்பணித்துறை – கட்டடங்கள் – சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் அரசு அலுவலர்களுக்கு ரூ.184,06,16,826/– மதிப்பீட்டில் 1500 குடியிருப்புகள் கட்டுதல் – நிர்வாக ஒப்பளிப்பு அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணி (ஒய்2) த்துறை**

அரசு ஆணை (நிலை) எண். 39 நாள்: 07.02.2011

தை 24,
திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்க:

தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை, சென்னை–5, கடிதங்கள் எண். உசெபொ/தொ.நு.12/16296/2010, நாள் 28.07.2010 மற்றும் 28.09.2010.

----

**ஆணை:**

2010–2011 ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

‘‘தற்போது சென்னை நகரின் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகிய சைதாப்பேட்டை தாடண்டர் நகரில், சுமார் 37.93 ஏக்கர் பரப்பளவில், அரசு அலுவலர் குடியிருப்புகள் உள்ளன. இதில், 1925 ஆம் ஆண்டு முதல் 1963 ஆண்டு வரை கட்டப்பட்ட 355 பழைய ஓட்டு வீடுகளும் அடங்கும். சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் இருந்த அரசு அலுவலர் குடியிருப்புகள் போன்றவை புதிய சட்டப் பேரவை, தலைமைச் செயலக வளாகம் கட்டுவதற்காக இடிக்கப்பட்டு, அங்கு வசித்து வந்தவர்களுக்கு மாற்று இடவசதியினை அரசு அளித்து வந்துள்ளது. எனினும், மாற்று வசதி அளிக்கப்பட்டவர்கள் தாடண்டர் நகரில் வீடு ஒதுக்கீடு செய்து தருமாறு அரசுக்குக் கோரிக்கை அளித்து வருகின்றனர். இந்த வளாகத்தில் ஏற்கனவே 2009–2010 ஆம் ஆண்டு 126 குடியிருப்புகள் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வந்த போதிலும், அரசு அலுவலர்கள் சென்னை மாநகரத்தில் குடியிருப்புகள் கிடைப்பது அரிதாக உள்ளது என்று தெரிவித்து, அவர்களுக்கு அரசு வாடகை குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்து தருமாறு கோரிக்கையினை வைத்துள்ளனர்.

/த.பி.பா./

அரசு அலுவலர்களது கோரிக்கையினை பரிசீலித்து, தாடண்டர் நகரில் மிகப் பழைய 325 ஓட்டு வீடுகளை இடித்து விட்டு, 15 புதிய அடுக்கு மாடிக் கட்டடங்களைக் கொண்ட கட்டடத் தொகுப்புகளைக் கட்ட முடிவெடுத்துள்ளது. இதில் ஒவ்வொரு கட்டடமும் 10 தளங்களுடன் 100 குடியிருப்புகள் கொண்டதாக அமையும் ஆக மொத்தம் 1500 புதிய குடியிருப்புகள் கட்டப்பட உள்ளன. மேலும், வணிகவளாகம், பொதுப்பணித்துறை அலுவலர்கள் தங்கும் இல்லம், வங்கிகள், அஞ்சல் அலுவலகம், சமுதாயக் கூடம், விளையாட்டுத்திடல், நடைபயிற்சித்தடம், உடற்பயிற்சிக்கூடம், பூங்கா, உட்புற சாலைகள் முதலிய அனைத்து வசதிகளுடன் மறுகட்டமைப்பு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூபாய் 175 கோடி செலவில் ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.''

2. மேற்காணும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில், திட்ட வரைபடம் மற்றும் கட்டிடத் தோற்றத்தின் அடிப்படையில் 2010–2011 ஆம் ஆண்டிற்கான தளபரப்பு விலைவீதத்தின்படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள வசதிகளுடன் ரூ.190.40 கோடி மதிப்பீட்டில் 1500 அரசு அலுவலர் குடியிருப்புகள் கட்டுவதற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:–

(1) அனைத்து வீடுகளின் தளங்களில் செராமிக் ஓடுகள் பதித்தல்.

(2) மின்தூக்கி வசதி.

(3) ஒரு கட்டிடத் தொகுப்பிற்கு ஒன்று வீதம் இடிதாங்கி வசதி.

(4) விதிமுறைகளின்படி 'தீ தடுப்பு வசதிகள்'.

(5) உட்புற சாலை வசதிகள்.

(6) குடியிருப்பு கட்டிடத்தின் மதிப்பீட்டில் 1.5% புல்வெளி அமைப்பதற்கு என்ற விதிமுறையின்படி இதில் புல்வெளி அமைக்கும் வசதி.

(7) மழைக்காலங்களில் நீர் ஊறுவதிலிருந்து கடைக்கால் பகுதியை பாதுகாக்க உரிய வசதி.

(8) தேவையான அளவிற்கு சுவர் அலமாரிகள்.

3. அரசின் கவனமான பரிசீலனைக்குப்பின், தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை அவர்களின் கருத்துருவினை கீழ்க்குறிப்பிட்டவாறு குறைத்து ரூ.184,06,16,826/– (ரூபாய் நூற்று எண்பத்து நான்கு கோடியே ஆறு இலட்சத்து பதினாறாயிரத்து எண்ணூற்று இருபத்து ஆறு மட்டும்) மதிப்பீட்டில் சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில்

அரசு அலுவலர்களுக்கு 1500 குடியிருப்புகள் கட்டுவதற்கு நிர்வாக ஒப்பளிப்பு அளித்து அரசு ஆணையிடுகிறது:—

| வ. எண். | பணியின் விவரம் | தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை அவர்களால் கருத்துரைக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை (ரூ.) | அனுமதி அளிக்கப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|---|---|
| (1) | ‘A’ வகை குடியிருப்புகள் | 19,95,00,000 | 19,52,82,053 |
| (2) | ‘B’ வகை குடியிருப்புகள் | 17,60,00,000 | 17,19,24,713 |
| (3) | ‘C’ வகை குடியிருப்புகள் | 80,36,00,000 | 77,29,15,920 |
| (4) | ‘C’ வகை குடியிருப்புகள் (Part – Stilt + 4 Floors) | 4,50,00,000 | 4,49,95,000 |
| (5) | ‘D’ வகை குடியிருப்புகள் | 60,60,00,000 | 58,15,99,140 |
| (6) | தலைமைப் பொறியாளர்கள் / கண்காணிப்பு பொறியாளர்களுக்கான குடியிருப்புகள் | 1,57,00,000 | 1,57,00,000 |
| (7) | செயற் பொறியாளர்கள் / உதவி பொறியாளர்கள்2 / உதவி பொறியாளர்கள் மற்றும் இளநிலைப் பொறியாளர்களுக்கான குடியிருப்புகள் | 61,00,000 | 61,00,000 |
| (8) | வணிக வளாகம் | 25,00,000 | 25,00,000 |
| (9) | பொதுப்பணித்துறை அலுவலர்கள் தங்கும் இல்லம் | 50,00,000 | 50,00,000 |
| (10) | வங்கி | 25,00,000 | 25,00,000 |
| (11) | அஞ்சல் அலுவலகம் | 25,00,000 | 25,00,000 |
| (12) | சமுதாயக்கூடம் | 1,29,00,000 | 1,29,00,000 |
| (13) | விளையாட்டுத் திடல் | 20,00,000 | 20,00,000 |
| (14) | நடைப்பயிற்சித் தடம் | 15,00,000 | 15,00,000 |
| (15) | உடற்பயிற்சிக் கூடம் | 30,00,000 | 30,00,000 |
| (16) | பூங்கா | 50,00,000 | 50,00,000 |
| (17) | உட்புறச் சாலைகள் | 1,52,00,000 | 1,52,00,000 |
| **மொத்தம்** | | **190,40,00,000** | **184,06,16,826** |

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:—

> “4216 – வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு – 01. அரசுக் குடியிருப்புக் கட்டிடங்கள் – 106. பொதுத் தொகுப்பு இடவசதி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II. மாநிலத் திட்டம்– JA பொதுப்பணித்துறை – வீட்டு வசதித் திட்டங்கள் – 16 பெரும் பணிகள் (கு.தொ.கு. 4216–01–106–JA–1605).”

5. இச்செலவினம் “புதுப்பணிகள்” (New Service) குறித்ததாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலைப் பெறும்

/த.பி.பா./

வரையில், இத்திட்டத்திற்கான ஆரம்பச் செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு செலவு.பொது–1) துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து நடப்பு நிதியாண்டிற்கு தேவைப்படும் முன்பணத்தொகையினை பெறுவதற்கு, வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு செலவு.பொது–1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை, சென்னை–5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலும் இச்செலவினம் குறித்து சட்டப்பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு இவ்வாண்டின் துணை மதிப்பீட்டில் (Supplementary Estimates) சேர்த்திட, இப்பணிக்கான மொத்த நிதியொதுக்கீடு, இந்த நிதியாண்டில் பணிகளின் செயலாக்கத்திற்காக தேவைப்படும் செலவினம் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய விளக்கக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (வரவு செலவு.பொது–1) துறைக்கு அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை, சென்னை–5 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட பணியினை குறித்த காலத்திற்குள் செய்து முடிக்குமாறும் மற்றும் பணிகள் முன்னேற்றம் குறித்த மாதாந்திர அறிக்கையை அரசுக்கு தவறாமல் அனுப்புமாறும் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை, சென்னை–5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை, நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 5952/பொ.ப.I/2011, நாள் 4.2.2011 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1981 (ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து ஒன்று) –ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

கி. தனவேல்,
அரசு செயலாளர்.

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித்துறை, சென்னை–5.
கண்காணிப்புப் பொறியாளர், கட்டட கட்டுமான வட்டம், பொதுப்பணித்துறை,
தமிழ்நாடு புதிய சட்டப் பேரவை வளாகம் (பிளாக்-A), சென்னை –2.
முதன்மை மாநில கணக்காயர் (A&E), சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், எழும்பூர், சென்னை–8.
<u>நகல்:–</u>
முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
நிதியமைச்சரின் கூடுதல் செயலாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை–9.
பொதுப்பணித்துறை செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
பொதுப்பணித்துறை சிறப்புச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
பொதுப்பணி (ஜி/எச்) த்துறை, சென்னை–9.
நிதி (பொ.ப. I / வ.செ. பொது I / வ.செ. பொது II) த்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

பிரிவு அலுவலர்